**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 28 / 2023**

Deposition of Witness : LW18 /PW11

| | | | |
|---|---|---|---|
| Name | K.R.சந்திரசேகரன் | Taluk | |
| Father's Name | K.P.ராமமூர்த்தி | Village | |
| Age | | Calling | சார்பதிவாளர், ஓய்வு |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 19.05.2026.** | | | |

1 ம் எதிரி ஆஜர். 3,4,5 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 317 ன்படி மனு அனுமதிக்கப்பட்டது. CMP NO. 284/2026 மனு உத்தரவுப்படி கூடுதல் சாட்சியம் அளிக்க ஆஜரானவரை சாட்சியம் எடுக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் கரூர் மாவட்டம் பதிவாளர் அலுவலகத்தில் இணை I சார்பதிவாளராக பணிபுரிந்து 2019 ம் ஆண்டு ஜுன் மாதம் ஓய்வு பெற்றுள்ளேன். நான் மேற்படி அலுவலகத்திற்கு 2018 ம் ஆண்டிலிருந்து ஓராண்டு காலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ,11 திருமண பதிவு சான்றிதழின் சான்றிட்ட நகல், நான் பணிபுரிந்த காலத்தில் என்னால் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு மணமகன், மணமகள் இருவரையும் விசாரித்து அதற்கு ஆதரவாக அவர்கள் இருவரின் புகைப்படத்தில் சான்றொப்பமிட்டுள்ளேன். திருமணத்தை பதிவு செய்து சான்றாக வழங்கியுள்ளேன். அந்த ஆவணத்தில் உள்ள இணை சார்பதிவாளர் கையொப்பம் என்னுடையதுதான். மணமகன் புகைப்படம் அருகிலும், மணமகள் புகைப்படம்

Sd/−T.Wajitha Thabassm,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

அருகிலும் உள்ள சார்பதிவாளர் கையொப்பம் என்னுடையதுதான். இந்த திருமணம் என்னால் பதிவு செய்யப்பட்டு பதிவு சான்று எண். 14/2018 என பதிவு வழங்கியுள்ளேன்.

2) பொதுவாக திருமணம் குறித்து பதிவு செய்யும்போது கட்டாயமாக மணமகன், மணமகள் இருவரும் ஆஜராகவேண்டும், எங்கு திருமணம் செய்யப்பட்டது, எங்கு குடியிருந்து வருகீறிர்கள் , வயது குறித்து ஆவணங்களை சரிபார்த்த பின்னர் திருமணம் குறித்து மணமகன், மணமகள் இருவரிடம் சம்மதம் பெறப்பட்டதா என்பது குறித்தும் உறுதி செய்த பின்னரே திருமணம் பதிவு செய்யப்படும். இந்த வழக்கில் திருமண பதிவு சான்று 14/2018 பதிவு செய்யப்பட்டபோது திருமண பதிவிற்கான விண்ணப்பத்தை நான்தான் பெற்றுள்ளேன். அதற்கான சுருக்கு கையொப்பத்தை விண்ணப்பத்தின் மேல் பகுதியில் போட்டுள்ளேன். 11.05.2018 ம்தேதி பதிவிற்கான விண்ணப்பத்தையும் பள்ளி மாற்று சான்றிதழ், மணமகன் ஆதார் அட்டை, மணமகனின் சாதி சான்றிதழ், மணமகள் மாற்று சான்றிதழ், மணமகளின் ஆதார் அட்டை, மணமகளின் சாதி சான்றிதழ், மணமகன், மணமகள் இருவருக்கும் முதல் திருமணம் என்பதை உறுதிசெய்வதற்காக கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்ற சான்றிதழ்கள், திருமண பத்திரிக்கை, பெற்றோர்களின் ஆதார் அடையாள அட்டைகள் ஆகியவற்றை பரிசீலித்து திருமண பதிவை செய்துள்ளேன்.

3) அந்த பதிவு சான்றின்படி மணமகனின் பெயர் பாலசுப்ரமணி, மணமகளின் பெயர் நித்யா என்றும் பதிவு செய்துள்ளேன். என்னிடம் கொடுக்கப்பட்ட ஆவணங்களின் படி மணமகன் பாலசுப்ரமணியத்திற்கும், மணமகள் நித்யாவிற்கும் இது முதலாவது திருமணம் என்று பதிவு செய்து கொடுத்துள்ளேன். **திருமண பதிவிற்கான விண்ணப்பம் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாலசுப்ரமணியின் பள்ளி மாற்று சான்றிதழின்**

Sd/–T.Wajitha Thabassm,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

**சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது . பாலசுப்ரமணியின் ஆதார் அட்டையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது. பாலசுப்ரமணியின் சாதி சான்றிதழின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது. நித்யாவின் கல்லூரி மாற்று சான்றிதழின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது . நித்யாவின் ஆதார் அட்டையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது. நித்யாவின் சாதி சான்றிதழின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது. பாலசுப்ரமணியின் முதல் திருமணம் என்பதற்கான கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நித்யாவின் முதல் திருமணம் என்பதற்கான கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. MS திருமண மண்டபத்தில் பதிவு செய்ததற்கான விண்ணப்பத்தின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாலசுப்ரமணியின் தந்தை ராமசாமியின் குடும்ப அட்டையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நித்யாவின் தந்தை நடேசனின் குடும்ப அட்டையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருமண அழைப்பிதழின் அசல் அ.சா.ஆ. 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) பாலசுப்ரமணி, நித்யா இருவரும் இந்து மதத்தை சார்ந்தவர்கள் என்றும், பாலசுப்ரமணி கைக்கோளார் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், நித்யா பள்ளர் இனத்தை சார்ந்தவர் என்றும் ஆவணங்கள் மூலமாக தெரிந்து கொண்டேன். இந்த பதிவு நான் பணிபுரிந்த காலத்தில் பதிவு செய்யப்பட்டது.

Sd/–T.Wajitha Thabassm,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) திருமண பதிவிற்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பம் எங்களது அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது அல்ல என்றால் சரிதான். இந்த விண்ணப்பத்தில் உள்ள படிவங்களின் மாதிரிகள் ஆவண எழுத்தர்கள்தான் செய்வார்கள் என்றால் சரிதான். விண்ணப்பத்தை ஆவண எழுத்தர் முன்கூட்டியே கொடுத்துவிடுவார் என்றும், அதன் பின்னிட்டுதான் தரப்பினர்கள் ஆஜராவார்கள் என்றால் ஒன்றாகத்தான் வருவார்கள். மேற்படி விண்ணப்பத்தில் என் முன்னிலையில் தரப்பினர்கள் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். நான் தரப்பினர்களிடம் பெறப்பட்ட விண்ணப்பத்தில் எந்த தேதியில் சமர்ப்பித்தார்கள் என்று தேதி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

2) படிவம் 7 ல் Date of Registration of Marriage என்று குறிப்பிடபட்டிருக்கும் இடத்தில் எந்த தேதியும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும், அதே படிவத்தில் திருமண பதிவு செய்வதற்காக அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு, அது எந்த தேதியில் செலுத்தப்பட்டது என்ற விவரங்கள் அடங்கிய பகுதியில் எதுவும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது என்றால் சரிதான். படிவம் 2 ல் 27.04.2018 ம்தேதி MS மஹால், வடக்குபாளையம் என்ற இடத்தில் திருமணம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த படிவம் 4 ல் Order or Refusal for Registration of a Marriage என்பதில் எந்த விதமான வாசகங்களும் நிரப்பப்படாமல் காலியாக உள்ள படிவம்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) எனது அலுவலக அதிகார எல்லைக்குள் நடக்கும் திருமணத்தைதான் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்ய முடியும், எங்கள் அலுவலக அதிகார எல்லைக்கு அப்பால் நடைபெறும் திருமணத்தை எங்கள் பதிவு அலுவலகத்தில்

Sd/−T.Wajitha Thabassm,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

பதிவு செய்யமுடியாது என்றால் சரிதான். மண்மங்கலம் வட்டம், மண்மங்கலம் கிராமம் ஸ்ரீ வாரி வரதராஜர் பெருமாள் திருக்கோவிலில் நடைபெற்ற திருமணத்தை எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யமுடியுமா என்றால் பதிவு செய்யமுடியாது. படிவம் 1ல் Memorandum of Registration of Marriage என்ற படிவத்தில் Additional Details of Husband என்ற இடத்தில் எந்த விவரங்களும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி படிவத்தில் மணமகன், மணமகள் என்ன தொழில் செய்கிறார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் மணமகன் என்ற இடத்தில் Salary Employee என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் வங்கியில் பணிபுரிகிறார் என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) மணமகனுக்கான முதல் திருமணம் சான்று என்பதில் மணமகனுடைய கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மணமகளுக்கான முதல் திருமண சான்றில் MS மஹால், தாந்தோணி, கரூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கரூர் – திருச்சி ரோட்டில் உள்ள MS மஹாலில் திருமணம் நடைபெறுகிறது என அச்சிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். VAO சான்றிதழில் திருமண இடம் MS மஹால், தாந்தோணி என்றும் திருமண பத்திரிக்கையில் கரூர் – திருச்சி ரோடு வடக்குபாளையம் பிரிவில் MS மஹாலில் என குறிப்பிட்டுள்ள வித்தியாசங்கள் பற்றி தரப்பினர்களிடம் நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் Ex.D12 எங்கள் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பதிவிற்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தில் மணமகனின் முகவரியாக அம்மன் நகர் 2nd Street, vengamedu என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) 30.10.2015 ம்தேதி 1ம் எதிரி அவர் வாங்கிய சொத்தை கிரையம் பெறுவதற்காகவும், 30.12.2019 ம்தேதி அதே சொத்தை விற்பனை செய்வதற்காகவும் மட்டும்தான் எங்களது பதிவு அலுவலகத்திற்கு வந்துள்ளார்

Sd/–T.Wajitha Thabassm,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

என்றும், 11.05.2018 ம்தேதி 1ம் எதிரி எங்களது அலுவலகத்திற்கு வரவேயில்லை என்றும், அவர் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நித்யா என்பவர் மோசடியாக, அவருக்கான செல்வாக்கை பயன்படுத்தி என்னிடம் பதிவிற்காக கொடுத்த ஆவணங்களை நான் தீர விசாரணை செய்யாமலும், ஆவணங்களை முழுமையாக பரிசீலனை செய்யாமலும், தரப்பினர்கள் ஆஜர் இல்லாமலும் போலியாக பதிவு சான்றிதழ் வழங்குவதற்கு அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பதிவிற்கு முன்பு எங்களது அலுவலக அறிவிப்பு பலகையில் திருமணம் குறித்த அறிவிப்பை செய்யவில்லை என்றால் சரிதான். அறிவிப்பு கொடுக்கவேண்டிய அவசியமில்லை, Special Marriage Act க்கு மட்டுமே அவ்வாறு அறிவிப்பு கொடுக்கவேண்டும். நான், நடக்காத ஒரு திருமணத்தை, நடந்ததாக பதிவு செய்து சான்றிதழ் வழங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை**

திருமண பதிவிற்காக மணமகன் குடியிருக்கும் இடம், மணமகள் குடியிருக்கும் இடம், திருமணம் நடந்த இடம் இந்த மூன்றில் ஏதாவது ஒன்று எங்களது அதிகார வரம்பிற்குள் இருந்தால் திருமண பதிவு மேற்கொள்வோம். என்னிடம் காண்பிக்கப்படும் மணமகனின் தகப்பனார் ராமசாமியின் குடும்ப அட்டையில் அம்மன் நகர், 2வது தெரு, வெங்கமேடு, கரூர் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பதிவில் MS மஹால், வடக்குபாளையம் திருமணம் நடந்துள்ளதால் திருமணம் நடந்த இடத்தை வைத்து பதிவு செய்துள்ளேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.